மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ஆம் ஆண்டு ஜீலை மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை.

இடைநிலை மனு எண்.6/2024
இன்
அசல் வழக்கு எண்.750/2019

ராஜதுரை ....மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

பிச்சைப்பிள்ளை ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 12.06.2024 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் திரு. S. மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. சுபாஷ்சந்திரபோஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ், மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக 24.04.2019 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்

மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி என்றும், அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு எதிர் வழக்குரைக்காக 24.04.2019 ம் தேதி வாய்தா அளிக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு கேரளாவிற்கு சென்று கூலி தொழில் செய்து வந்ததால், தன்னால் தனது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி எதிர் வழக்குரையை தயார் செய்து தாக்கல் செய்யமுடியவில்லை என்றும், மேற்படி தவறுகைக்காக 24.04.2019 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே மேற்படி வழக்கில் மனுதார்/ 2 ம் பிரதிவாதி தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.07.12 17:33:37 +0530

செய்து தான் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்க வேண்டும் என்றும், இல்லாவிடில் தங்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எதிர்உரையை ஏற்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர்/ 2ம் பிரதிவாதி தரப்பு மனுவில் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், மனுதாரர் இவ்வழக்கில் 2–ம் பிரதிவாதி என்றும், 1–ம் பிரதிவாதி மனுதாரரின் தாயார் என்றும், 3–ம் பிரதிவாதி மனுதாரரின் சகோதரர் என்றும், எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை நிரந்தரதடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தில் உள்ள "C" அட்டவணை வண்டி பாதையை பிரதிவாதிகள் வாதி பயன்படுத்துவதை தடை செய்ய முற்பட்டதால் தாவாவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு ஆஜராகி ஒருதலைபட்சமாக உத்தரவாகிய பின்னிட்டு எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், 1 மற்றும் 3–ம் பிரதிவாதிகள் தங்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்சமான உத்தரவை ரத்து செய்ய கோரி மனு கொடுத்து அம்மனுவில் அறிவிப்பு கொடுக்காத காரணத்தினால் அம்மனு IA.No.4/2022–ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றும், தள்ளுபடி ஆன மனுவை திரும்ப விசாரணைக்கு கோப்பிற்கு எடுக்க கோரி மனு கொடுத்து அம்மனு IA.No.5/2022–ல் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு வாதி தரப்பில் வாதுரை செய்யப்பட்டு தீர்ப்பிற்காக வாய்தா போடப்பட்டுள்ள சமயத்தில் இம்மனுவை மனுதாரர் பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,
" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>6. தீர்வு</u>

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி என்பதும், வழக்கு கட்டினை பரிசீலித்த

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.07.12 17:33:46 +0530

வகையில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி, மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு 13.08.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 07.09.2018 ம் தேதி மனுதாரர்/ 2 ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. M. வீரமுத்து என்பவர் ஆஜராகியுள்ளதும், அதுமுதல் 24.04.2019 ம் தேதி வரையில் நீதிமன்றத்தில் அழைத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அசல் வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளதும், பின்னிட்டு எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் சாட்சியம் விசாரிக்கபட்டு வாதத்திற்காக வைக்கபட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது வழக்கு கட்டினை பரிசீலிக்கையில் தெரியவருகிறது. மனுவில் மனுதாரர்/2 ம் பிரதிவாதி கூறியுள்ள காரணமான கேரளாவிற்கு சென்று கூலி தொழில் செய்து வந்ததால், தன்னால் தனது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி எதிர் வழக்குரையை தயார் செய்து தாக்கல் செய்யமுடியவில்லை என்று கூறியுள்ள காரணத்தை மறுத்து எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்கண்ட வழக்கில் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தால் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கதல்ல என்று எதிருரை தாக்கல் செய்துள்ளதையும் ஆராய்கையில், மனுதாரர் அசல் வழக்கில் ஏன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதற்கான காரணமான கேரளாவிற்கு சென்று கூலி தொழில் செய்து வந்ததால், தன்னால் தனது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி எதிர் வழக்குரையை தயார் செய்து தாக்கல் செய்யமுடியவில்லை என்று கூறிய காரணம் முழுமையாக ஏற்கத்தக்கது இல்லை என்றாலும், எதிர்வழக்குரையை இம்மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளதாலும், மனுதாரர் தனது கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் பொருட்டு நலம் என்று கருதியும், மனுவை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் போதிய காரணம் கூறாத நிலையிலும், இருப்பினும் எதிர்மனுதாரருக்கு காலதாமதத்தின் மூலம் ஏற்பட்டிருக்கும் இழப்பீட்டை சரிசெய்யும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்பட்டும் எந்த ஒரு நிபந்தனைகளையாவது மனுதாரர் மீறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக உத்தரவிடப்படுகிறது.

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.07.12 17:33:57 +0530

மனுதாரர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

1. மனுதாரர் அடுத்த வாய்தா தேதியில் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/– காலதமத்தினால் ஏற்படும் இழப்பீட்டை சரிசெய்யும் வகையில் செலுத்தி அதற்குண்டான மெமோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

2. மனுதாரர் அசல் வழக்கினை காலம் தாழ்தாமல் தேவையற்ற வாய்தா பெறாமலும் வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஜீலை மாதம் 12–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.07.12 17:34:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.07.12 17:34:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.